முருகப்பெருமான் துணை

**மகான் திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் அருளிய அருளாசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**31.07.2022**, ஞாயிற்றுக்கிழமை

1. அவதாரமே தவ கீர்த்தியே
அண்ணலாக வந்த ஞானியே
புவனம் வெல்லும் சக்தியாக
புண்ணிய வடிவில் வந்த அரங்கனே
2. அரங்கனே உன் பெருமை கூறி
அகிலமதில் சுபகிருது நள்ளிதிங்கள்
வரங்களென மூவை திகதி கதிர்வாரம்
(சுபகிருது வருடம் ஆடி மாதம் 15 நாள், 31.07.2022 ஞாயிற்றுக்கிழமை)
வழங்குவேன் அருளாசி தன்னை
3. தன்னை திருஞானசம்பந்த மூர்த்திநாயனாரும்
தரணியே வளம்பெற உரைப்பேன்
அண்ணலான அரங்கன் அவதார
அற்புதம் தனை உலகமே அறிய
4. அறிய மாற்றம் சடுதி உண்டு
அழிவுகள் அநீதிகள் அனைத்தும்
தெரிவிப்பேன் விலகி மாற்றம்
தேசிகன் தயவின் வடிவாக
5. ஆகவே மக்களிடை மனமாற்றம்
அவரவர் செயல்பாடுகள் தனில்
வகையாக தருமநெறிகளும்
வல்லமைபட ஆளுமைக்கு தயவு பலமும்
6. பலமான நலத்திட்டம் தரும்
பண்பான செயல் வடிவாக
வளமுற மக்களை பாதுகாக்கும்
வல்லமைதரும் ஞான ஆட்சியாக
7. ஆகவே அரங்கன் ஆசியால்
அற்புதம் தனை உலகம் அடையும்
வகைபட அரங்கன் வழி
வருகின்ற தொண்டர்படைகள் எல்லாம்
8. படைகளெல்லாம் ஆறுமுகனார்
பாதுகாப்புபெற்ற சக்திகளாக
தடையற எங்கும் எதிலும்
தனித்துவம் கொண்ட மாந்தர்களாகி
9. ஆகியே சர்வபலமும் கூடி
அரங்கமகான் தேடுகின்ற
அகிலம் காக்கும் ஞானிகளாக
அழியாமை பெற்றவர்களாகத் தேறுவர்

10. தேறவே தெய்வ நெறி வழி
தேசமெங்கும் சக்தி பரவிட
மாறுமே இயற்கையும் சாதகமாக
மழைவளம் மண்வளம் பசுமைவளம்

11. வளம் குன்றா நிலை பெருகி
வையகம் பாதுகாப்பை பெறும்
பலமுற ஞான ஆட்சிப் பெறும்
பாடிவந்த அருளாசி முற்றே

–சுபம்–